மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XIII. } Madras : December 1911. { No-12.

புத்தகம் - கரு. } சென்னப்பட்டணம்: டிசம்பர்மீ 1911. { இலக்கம்-12.

மாட்சிமைதங்கிய

5-வது ஜார்ஜ்மன்னரின் முடிச்சூட்டகவல்.

செங்கோற்சிறப்பு.

நாற்கடல் சூழ்ந்த நானிலந் தன்னில்
மங்கையர் கற்புங் கணவர் வாழ்க்கையும்
நாளுஞ் சிறந்து நன்மைகள் பெருகும்
நீர்வளம் புவிமேல் நித்தமும் பெருகும்
சந்ததி வகையுஞ் சதிரா யோங்கும்
பல்வளம் பிறவும் பாரிற் பலிக்கும்
தொல்குலச்சீருதுந் துணையாய்த்தொடரும்
கல்வி வகையுங் காட்டுஞ் சுகவழி
வேதிய ரொழுக்கமும் விலகா தொளிரும்
சாதியுங் குலமுந் தரையிற் குலவிடும்
சூதும் வாதும் சூழா தகலும்
வாதும் வழக்கும் வகையிற் குறையும்
கப்பலின் பொருள்கள் கரையின் மலியுந்
தானிய மெங்குந் தரமாய்க் கொழிக்கும்
மாதமும் மாரி வளமுறப் பெய்யும்
காலிகள் மேய்விடக் கனமா மெங்கும்
பயிர்த் தொழிலெங்கும் பலிக்கும் தினமும்
ஆயுட் பெருக்கமும் மறிவின் முதிர்ச்சியும்
காயந் திடமாம் கனவைத் தியமும்
நன்கொடை சிறக்கும் நானில மெங்கும்
மன்னவர் செங்கோல் வளமே காரணம்
மற்றொன் றில்லை மதித்துக் காண்மின்
ஜம்புத் தீவில் ஜார்ஜா மரசர்
பாரத வருடம் பகரும் பிரிவில்
பரத கண்டப் பழம்பதி யாகும்
அத்தினா புரியி லழகா யிப்போ
மன்னர்கள் மன்னர் மாமுடி யேற்கும்
இந்நாட் சுகநிலைக் கிணைமுன் புண்டோ
இராம னாண்ட விப்பா ரிடத்தில்
பூமன் னாகப் போந்தா ரிருவரும்
சுகமும் பெருகும் சூதுகள் குறையும்
அசோக னாக்ப ராண்ட விடத்தில்
மேரியா மன்னையின் மிகுசெல்வ மாகும்
ஜார்ஜா மன்னரை ஜகமீ திப்போ
போற்றுமின் புகழ்மின் புதுவழி யாக்கி
நம்மை யவரும் நலமுற வைப்பர்
மங்கையர் சீரும் வளமா யுயரும்
பலபேர் தம்மனம் பரமனை நாடிக்
கோரும் பலமெலாங் கூடிடு நிச்சயம்
கபடம் விலகிற் கலித்துய ரொழியும்
மூன்று காரணமு மொருவழி முதிர்ந்தால்
தோன்றுஞ் சுகமும் சொல்லிது நிச்சயம்
பாரின் மாந்தர்காள் பரமன் கருணைக்
காகா மாகு மரசரா லனைத்தும்
பலிப்பது நிச்சயம் பண்டைநாள் வழக்கம்
சொன்னவன்வேதியன் சோணாடுதித்தவன்
இப்போ சென்னையா மிந்நகர் தன்னில்
நுங்கம் பாக்கம் நூலுணர் வேதியர்
வீதியுள் வாச வேங்கட ராமன்
தமிழுக்குழைப்பவன் றன்னாளெல்லாம்
பார்ப்போர் கேட்போர் பதம்பெற லாமே

வாழி

வாழி வேதியர் நான்மறை வர்க்கமும்
வாழி மாமனு நீதியின் மார்க்கமும்
வாழி மங்கையர் கற்பதின் மாட்சியும்
வாழி யாங்கிலந் தீந்தமிழ் மாண்பதும்
வாழி மேழியின் செல்வமு மண்மிசை
வாழி கோத்திர நாற்குல மாண்பதும்
வாழி மேரியா மன்னையின் வாழ்க்கையும்
வாழி நற்றவர் மாண்புறு வர்க்கமும்
வாழி ஜார்ஜெனு மன்னர்செங் கோலுமே.

சென்னைநகர் நுங்கம்பாக்கம் 9-12-11 } தி. வேங்கடராமையங்கார் தமிழ்ப் பண்டிதர்.

மாட்சிமைதங்கிய

5-வது ஜார்ஜ் சக்கிரவர்த்தியவர்களின்

டில்லிமாநகர முடிசூட்டு வாழ்த்துப்பாக்கள்.

1. சித்திரம்போ லெதுவரினும் சிதையாத பெரும்பொறை கூர்திறலார்
புத்திரனர் முடிதரித்த வத்திநபுரி நகரிற் போந்தின்னாளும் [தர்ம
மித்திரமா யிந்தியர்க்குச் சத்திரம் தாங்கிய விஜனமைந்தர் ஈன்ற
புத்திராதா முடிசூடி யொற்றுமையைப பொலிவித்தார் புகழ்ச்சிகடா.

2. மாரிநிகர் பெருங்கருணை மனங்கொண்டு மாட்சிமைசேர் மகுடமன்னர்
சீரியதன் திருவடியிற் சிரந்தாழக்கோல் பிடித்த செல்வயார்தம்
பேரியல்நற் பவுத்திரராம் ஜார்ஜரசர் நீடூழி பிரியாவன்பின்
மேரியெனும் நாரியர்தம் மின்னோடு மினிதரசின் மேவிவாழ்க.

3. இக்கவியை யாயிரமேல் இயைந்த பனிரண்டாண்டின்
தக்க விருச்சிகமாதம் சார்இருபா னேழாம்நாள்
தொக்கமன் பூரமுதம் சுடர்ச்செவ்வாய் வாரமதில்
மிக்க ஜார்ஜரசர் பிரான்வியன் மௌலிமி சந்தனரே.

4. சேய்வார மங்கலமாய்ச் செப்பிநூரது நீக்கி
ஆய்வார்கள் வெள்ளி புதனுய பிறவாரமெலாம்
தாய்வாரம் கொண்டருள் நம் ஜார்ஜரசர் முடிபுனையச்
சேய்வார மங்கலத்தின் சிரவார மாகியதே

5. செவ்வாய்க் கிங்கிப்பெருமை சேர்தருமென் றுணாந்தேகொல்
ஒவ்வாத புகர்விளர்த்தான் உம்பர் குருநிறம் பழுத்தான்
அவ்வாத வன்கனன்றான் அம்புலியுமெ லிந்திட்டான்
இவ்வேது வாற்புதனும் எழில்கறுத்தா னெனலாமே.

6. ஏழுலகு முன்பாண்ட இந்துகுல நிருபரெலாம்
வாழிமுடி தரித்தநகர் வந்துமுடி தரித்தருளும்
எழிலக்கப் பெயர்அரசர் எழில்மகற்கு மிருபான்மேல்
எழிலக்கம் தேதிதிதி எழிலக்கம் இது வியப்பே.

7. ஐந்தெழுத்தாலாகிய வெட்வர்டெனும் பேர்தாங்கியநின் ஐயர்தோன்
அந்த வரிசையிலேழாம் அரசராம் அவரினும் நீஅரியாயென்றல் [றும்
முந்தைமுறை ஜார்ஜெனும் நின்மூவெழுத்தா லாயபெயர்முன்னே
[யைந்தெண்
வந்தமுறை குறித்திடுமோல் இந்தமுறை விந்தைபெற விசைந்ததாமே.

8. சூரிய சந்திரர் குலத்திற் றோன்றியே யுலகாண்ட
ஆரிய மன்னவர்களிலே அரசர்களுக் கரசனெனச்

சீரியராயினர் பலராய்ச் செப்புவார் செப்பிய அப்
பாரியரும் அரசிருக்கைப் பழம்பதியே யல்லாமல்

9. அடிசூடும் குடியானோர் அகங்களிப்ப அயல்நாடு
படிசூட வந்துளத்தின் பண்புடைமை வெளிப்படவே
முடிசூடி மகிழ்வித்தா ரிலையிலைநின் முன்பாண்ட
கொடிசூடும் ஆங்கில நற்குல வேந்தர் அனைவரினும்

10. இத்தகைய புதிய புகழ் இந்தியர்தம் மனத்தென்றும்
நித்தியமாய்ப் பதித்ததனால் நின்பெயரே நீடூழி
உத்தமநின் மூதாட்டியாவி உவந்தினித்திடவே
எத்திசையும் நிலைத்ததுவால் ஏவர் நினக்கிணையானோர் [அந்தச்

11. ஆரியர்கள் 'ஜீ'யெனுஞ்சொல் ஜயம் குறிக்கும் அறிகுறியா அறைவாய்ப்
சீரியஜீ, யார்ஜீயென், றிசைப்பதுவே நின்பெயராய்த் திகழ்தலால் உட்
கூரிய நல்லறிவாளர் ஜயம்பெறுநற் ஜயமெனவே குறிப்பார்நின்
பாரினில் நின்றனைப் புகழப்பதம் பிறிதுவேண்டுவதோ பாவலோர்க்கே

12. பொன்னகர் புரக்கும் இந்திரன் பகையும் போக்கிய தசரதனெனும்பேர்
மன்னவர் மன்னன் ஆளுகைதனிலும் மாண்புடை அச்சியந்திரங்கள்
தன்னிகர் தந்தி யொடு தபால் தூமசகட சாதனமிலாதன்றோ
வன்னசீர்ப் பரதன் உணர்ந்துறுமுன்னம் வளர்ந்ததுராம காதையுமே.

13. சாந்தமும் பொறையும் வாய்மையும் தயையும் தருமமு
மடக்கமுந் தலையாக
ஏந்தியே மறுமை யெய்துறும் விருப்பம் இந்தியர்க்
கியற்கையே யல்லால்
வாய்ந்த நும்மவர்போல் இம்மையிற் சுகிக்கும்
வழியறிந்தடைந்தலர் தஞ்
போந்த சாதனங்கள் அனைத்தும் எம்மவர்க்குப்
புதியவே பொலிந்தநும்

14. அரசரே திருமாலென்ற கங்கொள்ளல்வேண்டுமென வறைந்தாரோசி
விரசுநீதிகள் வருத்தமனு வேந்தரதுபோலவே றோர்நாட்டில்
உரைசெய்தோ ரிலையுளத்தி னுணர்ந்தோரு மிலையொழுகி னேருமில்லை
நிரைசெய்குணமா யின்றுமிந் தியருள் அக்குணந்தான் தழைத்ததாமே

15. மன்னுயிர்க்கோர் குறைகாண மனம்பொறா துடலரிந்தான்
சிபியாமன்னன்
தன்னொருநற் புதல்வனையே தான்சிதைத்தான்
ஒரு சோழன் தகைசால்கற்பின்
பன்னிதனக் காய்ச்செங்கோல் பற்றியதன் கரம்துணித்தான்
பாண்டிநாடான்
மன்னவனித் தகையர்பலர் இந்நாட்டி லாண்டுபுகழ்
மகிழ்வுற்றாரால்

16. வனவிலங்கு களுமரசர் பெயர்சொல்லித் தடுப்பாரேல்
வாய்ப்பூட்டிட்ட
தெனவிலங்கு மென்பார்கள் எனிலியற்கை யறிவுடைய
குடியாமாந்தர்
மனமிலங்கி யிருந்த பக்தியிதுவெனவே றெடுத்தோத
வார்த்தையேனோ ?
வினவிலிந்த நாட்டினர்போ லரசர்உயிர்க் குடலானோர்
வேறுண்டேயோ

17. கண்ணாலே யிந்தியரைக் காணாமலே மனத்திற் கருணைபூண்ட
பெண்ணுயகம் பிறக்கத் தவம்செய்த குலத்திலுமப் பெரியாள்போல
பண்ணாரும் பேரரசா யினரிலைநின் றனைப்போலும் பரதகண்டம்
உண்ணேயம் பெருகவிவண் போந்துமுடி பூண்டவரும் உளதின்றாமே.

18. இந்தியர்பாற் றனதுளத்தி லெழுங்கருணைக் கறிகுறியாய்
முன்னாள் உற்றன்
தந்தையரி னருந்தாயார் சாற்றியநல் விளம்பரத்தின் ஸாரம்யாவும்
சுந்தரநின் னாளுகையில் மேன்மேலு மிந்தியர்கள் துதிக்குமாறு
வந்திடுமென் றுவக்கின்றோ மற்றதுநின் றிருவுளத்து மகிழ்ந்துகோடி

19. ஸத்தியம் தண்ணளி நீதிதயை தருமம்அனைத்திினுக்கும் தாய்வீடாகும்,
உத்தமநற் பரதகண்ட முழுவதும்நின் னொருகுடைக்கீழ் உவந்துமாறாப்
பத்தியொடும் பலகோடி யிந்தியர்கள் வாழ்த்தியடி பணிந்துபோற்றும்
வித்தகனீ யாயினையால் இத்தனைபே றெவர்பெற்றார் விளம்புங்காலே

20. சந்திர குலத்தோர் தலைநகராகும் சால்புடை அஸ்தினாபுரிதான் [ம்
பிந்தியோர் சிறியவேந்த ருக்கிடமாய்ப் பெயர்பெற விரும்பிடாதோங்கு
சந்திரகலை நேர்நிறத்தினய் நினையே சார்ந்தது முயன்ற மாதவத்தால்
அந்தநற் பதவியாண்டு களோரையாயிர மாயின மறகும்

21. முற்றிலக்கம்நூற்றெட்டேபலனளிக்குமெனமொழிவார்முன்னோர்முன்னாம்
பெற்றவிளம் பரம்பிறந்தோ ரதிற்பாதி யாண்டுகளே பெயர்ந்தவின்னாள்
பற்றுமதன் பலனக வொற்றுமைதான் பலித்ததெனப் பகருமாறீங்
குற்றனைநீ முடிசூட இதற்கிணையோர் மந்திரமும் உரைக்கலாமோ.

22. ஆழிசூழு மகனிலத் தின்னுயிர், சூழவின்பம் சுகந்தலை தூக்கநீ
டூழிமேரி யரசியினோடுமே—வாழிவாழி வழிவழி வாழியே.

☞ அசலாம்பிகை யம்மாள்.

மாட்சிமைதங்கிய 5-வது ஜார்ஜ்மன்னரின்

வாழ்த்து.

மன்னன்வாழி! மன்னவர்கோமான்
எங்களிறைவன் இங்கிலந்துறைநற்
செங்கோன்வாழி! ஜியார்ஜூப்பிரபு
மன்னன்வாழி! மணாளன்வாழி!
ஓதமும்விசும்பும் உடனுற நிமிர்ந்ததும்!
ஆதவன்கணமும் அகலுருப் பெட்பதும்
வானுந்திசையும் வரைகளுங்கடலும்
கானும் நதிகளும் கயங்களும் நிதியும்
தேனும் அமிழ்தும் தெங்குங் கிளிகுயில்
மானும் அனம்பிடி மயிலுந் தமிழும்.
சேணுறப்பெற்றுத் திகழ்ந்ததும், ஒவ்வொரு
வாரமுமெழுதினம் மாரிபொழிவதும்,
ஆயிரக்கணக்கில் பாஷைகள் இலங்கச்
சேயெனக்கோடி மக்களைச் செறித்துச்
சகலமதங்களுங் கலைகளுமிருளை
அகலவேயோட்டி யகத்தினை யகற்றிக்
களிப்பைப் புகட்டி விழுப்பெயர்கொண்டு
அளிப்பதும், காவ லாட்களே யென்ன
இருப்புப் புணைபல ஏவலாயாண்டும்
பருப்பதம்பரவையில் மிதப்பது நிகர
ஓடி யாடி உசாவிக் குதித்து
நாடித்திரிவதும், நகுந்து குலாவி
இடிகளே யிறங்கிப் படைகளாய் வந்து
மிடியுந்தெவ்வும் மிசையுறு வண்ணம்
அடிமைத் தொழிலைப் புரிந்தும், அன்பாங்
கொத்தளவலியைக் கொண்டதும், கோடி
மத்தகன் சிம்மம் கர்ச்சனைக் கீர்த்தியை
உற்றவரல்லோர் உளமது கலங்கப்
பாடியும் வானுற வாடியும் நின்று
தேடியர் மற்றோர் தெரிசனங் காணுறும்.
"ஒற்றுமை ஏகக்" கொடியது தெளிவுற
"நற்றவர் புனிதர் நம்பினர்க்கரண்வலி.
"உருவிவர்திண்டோட் பெரியர். பகவனல்
"அருளினுக் குரியர் இருளை யகற்றுவர்.
"புலியும் பசுவும் ஒருதுறைப்புனலை
"மலிவிற வுண்ணும் மாண்பினர். எம்மர்
"நயம்படு செல்வி இராணிவிக்டோரியா
"மயமெனவந்து மரபினிலுதித்தவர்.
"ஏகச்சக்ரா பத்திய மியைந்தவர்
"மேகக் கொடையர் மெலிவையில்லா

"சந்திர சூரியர் தம்வழி யுதித்திடும்
"இந்தியர் இறைவர் எட்வார்ட்புதல்வர்"
என்றிசைபாடப் பெற்றதும், எங்கணும்
என்றிசையேதொனி கேட்பதும், மற்றுச்
சுற்றுறக்கோடி காதமேயாயதும்.
பெற்றியாக்கொண்ட பிரிட்டிஷ் ராஜ்யச்
சக்கரவர்த்தி ஜியார்ஜு மன்னவன்
மக்களிற்றிலகன் மன்னவர் மன்னன்
எல்லையிற் புகழைத் தொல்லையினுடுத்த
டில்லியில் மகுடஞ் சிறப்பினில் அணிய!
வாழ்த்துதும்! வம்மின்! வாழிய! வாழி!

☞ V. M. கலியாண சுந்தரமுதலியார், பி-ஏ.

நமது அரசசக்ரவர்த்தியாரின் முதல்பேச்சு.

நான் உங்களுக்கு அந்நியன் அல்லவென்று நீங்கள் சொன்னது சரி. நானும் உங்களுடைய அழகான நகரத்திற்கு அந்நியன் அல்ல வென்பதை யும் மனப்பூர்வமாக மறுமொழி சொல்லுவேன். உண்மையாகவே ஆறு வருஷங்களுக்கு முன் நான் இங்கு புதிதாகவந்தேன். ஆனால் நீங்கள் அப்பொழுது எனக்கு உள்ளன்புடனும், அனுதாபத்துடனும் உங்களது சந்தோஷத்தைக் காண்பித்தது எனது ஞாபகத்தில் இன்னும் புதிதாகவே யிருக்கிறது. உங்களது கடற்கரைக்கு வந்தவுடன் ஆச்சரியமான காட்சி தென்பட்டது. முதலில் தென்னமரங்களை நாங்கள் கண்டவுடன், அவைகள் கடலின் மத்தியிலிருந்து உற்பத்தியாகி யிருப்பதுபோல் தென்பட்ட காட்சி யும் எங்கள் ஞாபகத்திலிருந்து நீங்கவில்லை. இவைகளெல்லாம் என் மனதைக் கவர்ந்துகொண் டிருக்கின்றன. 1905-ம௵ பம்பாயிக்குவந்து இவ்விசால மான தேசத்தின் சில பாகங்களைப் பார்க்கவும் ஜனங்களைக் கண்டு அவர்களது நடை, உடை, பாவனை முதலியவைகளை யறிந்துகொள்ளவும் உங்களது அன்பான வரவேற்பால் தைரியங்கொண்டேன். நான் அப்பொழுது பெற்ற அறிவு பற்பல மதஸ்தர்களிடத்திலும் ஜாதியார்க ளிடத்திலும் என்னுடைய அநுதாபத்தை அதிகரிக்காம லிருக்கவில்லை. என்னுடைய அன்பிற்குரிய தகப்பனாரின் விசனகரமான மரணம் உண்டானபொழுது எனது முன்னோர்களின் சிம்மாசனத்திலிருக்க நேர்ந்தது. அப்பொழுது இந்தியாவிலுள்ள என்னுடைய நற்குணமுள்ள பிரஜைகளை மறுபடியும் பார்க்க வேண்டுமென்பது எனது உண்மையான விருப்பங்களில் முதன்மையா யிருந்தது.

என்பக்கத்தில் சக்ரவர்த்தினியாருடன் இங்கே மறுபடியும் இன்று நானிருப்பதைக் காண்பதும், எனது விருப்பம் நிறைவேறியதும், சாதாரண மனோவிகாரத்தின் உணர்ச்சிகளாலல்ல; ஆனால் மழையின்றி இவ்விராஜதானியிலுள்ள சில பாகங்களில் பஞ்சம்வருமோ என்ற பயம்தான் அவ்விதக் கவலையின் காரணம். நான் மனப்பூர்வ இருதயத்துடன் வந்திருக்கிறேன்.



டெல்லி நகரத்தின் தூரப்பார்வை.



லாகூர் கேட்

(இது டெல்லியிலிருக்கிறது.)

தெய்வானு கூலத்தால் நல்ல வேளையாய் மழைபெய்து வருகிறது அப்பய த்தை நீக்கிற்று. வசந்தகாலத்தில் நல்லமாசூல் உங்களுக்கு கிடைக்குமென்ற நம்பிக்கையினுல் சந்தோஷப்படுகிறேன்

ஒரு சமயத்தில் பம்பாய் ஒரு ராணியாருக்கு சீதனமாகக் கொடுக் கப்பட்டதென்று அட்ரசில் நீங்கள் சொல்லியிருப்பது உண்மையே. 250 வருஷங்களுக்குமுன் இது ஒரு மீன்பிடிக்கும் கிராமமாக யிருந்தது. இதை ஹம்பரிகூக் அப்பொழுது பெற்றுக்கொண்டார். பிரபுக்களாகிய நீங்களும், உங்களது முன்னோர்களும் பிரிடிஷ் கிரீடத்திற்கு இதை ஒரு ஆபரணமாகச் செய்தீர்கள், நான் இப் பட்டணத்திலுள்ள அழகுபொருந்திய பெரிய மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் காணுகிறேன். அதிக மேன்மை யுள்ளதா யிராவிடினும், அதிக லாபகரமான நன்மைகள் உண்டாகும்படி யானவைகளையும் காணுகிறேன். இந்நகரம் அவ்வித ஆபரணத்தின் சோதி யாய் விளங்கிவரும்படியும், பிரஜைகளாகிய எல்லா சாதியாரின் சௌக்கியம் அமைதி செல்வம் முதலியவைகளை விருத்திபண்ண நீங்கள் முயன்று வரு வதைக் கண்டும் கர்வமடைகிறேன்.

இன்றுமகாராணி சக்ரவர்த்தினியாரையும் என்னையும் உதாரகுணமுள்ள மனதுடன் வரவேற்றதற்காக உங்களுக்கு வந்தன மளிக்கின்றோம்.

நமது இந்திய இராஜ்யத்திலுள்ள பிரஜைகளுக்கு எப்பொழுதும், சுக மும், செல்வமும், சமாதானமும் யிருக்குமாறு கடவுளைப் பிரார்த்திக்கின் றோம்.”

டெல்லி.

இது முன்காலத்தில் இந்தரப்ரஸ்தம் என்று சொல்லப்பட்டு வந்தது. யுதிஸ்டரரால் இப்பட்டணம் ஸ்தாபிக்கப்பட்டது. கௌரவர்கள் இதற்கு 50 மைலுக்கு அப்பாலுள்ள ஹஸ்தினபுரியிலிருந்தார்கள். இவைகளுக்கு குருக் க்ஷேத்திரமெனப்பெயர். இந்திரப்ஸ்தத்துடன் “காண்டவப்ரஸ்தம்” என்றகாடு சேர்ந்திருந்தது. இக்காட்டைத்தான் அர்ச்சுனனும், ஸ்ரீ கிருஷ்ண பகவானும் அக்னியின் வேண்டுகோளுக்கிணங்கி அழித்துவிட்டார்கள். அக் காலத்தில் இந்தரப்ஸ்தம் இந்திரலோகம்போல் விளங்கியிருந்ததாம். இங்கு அநேக மாடமாளிகைகளும் கூட கோபுரங்களுமிருந்தன. இவ்விடத்திலேயே அனுருடனுடைய புத்திரன் வஜ்ரனென்போன் யாதவர்களுக்கு அரசனாக முடிசூட்டப்பட்டதாகவும் தெரிகிறது.

கிறிஸ்து பிறந்தபின் 11-வது நூற்றாண்டின் மத்தியில் அநங்கபால் என்ற ராஜபுத்திரன் குடப்பள்ளி வாசலிருக்குமடத்தில் Red Fort சிவப்புக் கோட்டை என்றதைக்கட்டினான். இதற்குச் சமீபத்தில் ஒரு பட்டணத்தை ஏற்படுத்திக்கொண்டான். 1052-ம் வருஷத்தில் இரும்புஸ்தூபியை ஸ்தா பித்து அதில் சந்த்ரகுப்த விக்ரமாதித்யன் என்று சதிக்கிவைத்தான். இவன் சந்ததியார் இவனுக்குப்பின் இங்கு 100 வருஷகாலம் அரசுபுரிந்து வந்தார்

கள். இவனுடைய பேரன் ப்ரிதிவிராஜ் (ராய்பிதுரை) என்றால் யாவருக்கும் தெரியும்; டெல்லிக்கும் ஆஜ்மீருக்கும் அரசனாகயிருந்தான்.

1193-வருஷம் மகமது கோரியால் இவன் தோற்கடிக்கப்பட்டான். இவனது அடிமையாயிருந்த குட்புதீன் டெல்லியை ஆண்டுவந்தான். 1206ம் வருஷத்தில் குடப்மைனர் என்ற மகுதியைக்கட்ட ஆரம்பித்தான். இதுபேர் பெற்ற கட்டடம். இவனது மறுமகனாகிய ஆல்டமஷ் இது அரை குறையாயிருந்ததைக்கட்டிமுடித்தான். இவனுக்குப் பின் சுல்டான் ரீஸியா என்ற மாதரசி இங்கு அரசுபுரிந்து வந்தாள். இவள ராஜதர்ம முடையவளாயும் மாசற்றவளாயு மிருந்து வந்ததுடன், கல்வியிற்றேர்ச்சி யுடையவளாயும், சக்தி யுடையவளாயு மிருந்து அரசு நன்றாகப் புரிந்துவந்தாள். துரதிர்ஷ்டவசத்தால் இவள் கைதியாக்கப்பட்டு கொல்லப்பட்டாள். இம்மாதரசிக்குப் பின் நாஸருடீன் என்பவன் பட்டத்திற்குவந்தான். இவன் நல்லகுண முடையவன், இவன் சந்நியாசியைப்போல் தன் வாழ்நாளைக் கழித்துவந்தான். கவி சிரேஷ்டர்களுடனும், வித்வான்களுடனும் எப்பொழுதும் பற்பல விஷயங்களைப் பற்றி ஆராய்ந்துகொண்டு தன் ஜீவிய காலத்தைப் போக்கி வந்தான். இவன் ஆளுகையில் கலகங்களுண்டாயின. இவனுடைய சேனைத் தலைவனாகியபால்பன் பட்டத்திற்குவரவே,இவன் அரசாட்சிசெழித்தோங்கவில்லை. இவனதுபேரன் கைக்குபாத் என்பவன் பட்டத்திற் குரியவனானான். ஆனால் உபயோக மற்றவனாகவும், புத்திசாதுரிய மில்லாதவனாயு மிருந்தமையால் இவன் கொலை செய்யப்பட்டான்.

1288-ம்வருஷ ஜலாலுடீன் கில்ஜி பட்டத்திற்கு வந்தான். இவன் ஆளுகையும் சிறப்பாகத் தோன்றவில்லை. மொகலாயர்கள் இவன் காலத்தில் டெல்லியை நோக்கிப் படையெடுத்துவந்தார்கள். அநேகரை மகமதிய மதத்தில் சேர்த்து அவர்களை டெல்லியிலுள்ள மொகல்பூரில் தங்கிவரும்படி ஏற்பாடு செய்தான். இவன் கடைசியாக அலாவுதீனால் கொலை செய்யப்பட்டான். மொகலாயரைத் தடுக்க 1299-ம்வருஷ சிரியில் தனது கோட்டையைப் பலப்படுத்தினான். இதைத்தான் புதுடெல்லி என்று சொல்லுகிறார்கள். இது பழைய டெல்லியுடன் சேர்க்கப்பட் டிருக்கிறது. இவனுக்கு சேனைத் தலைவனாயிருந்த மாலிக்காபர் தென்னிந்தியாவின்மீது படையெடுத்துவந்து அவன் டெல்லிக்குத் திரும்பிவந்ததும் தனது எஜமானனைக் கொலைபுரிந்தான். அடாது செய்தால் படாதுபடுவார்கள் என்பதிற்கிணங்க இவன் மோபர்க்கால் கொலை புரியப்பட்டான். மோபர்க் பட்டத்திற்கு வந்து சில காலம் அரசுபுரிந்துவந்தான். குஸ்ருகானாகிய ஒரு தாழ்ந்த இந்துபட்டத்தை யடைந்தான். 1321-ம்வருஷ, பஞ்சாபுக்கு கவர்னராயிருந்த காசிகான் டாக்லாக் எனபவனால் இவன் கொலைபுரியப்பட்டான். இவன்தான் இவ்வம்சத்தை ஸ்தாபித்தவன். கியாசுடீன் என்கிற பேரை வகித்துக்கொண்டு தொக்லகாபாத்தைப் பிரதான பட்டணமாக்கினான்.

இவனுக்குப் பின் 1325-ம் வருஷத்தில் மகமத்பின் டோகலாக் பட்டத்திற்கு வந்தான். சிறிதும் அதிர்ஷ்டமில்லாத இவன் மூன்றுதடவை தொலதாபாத்தைப் பிரதானபட்டணமாக்க முயன்றான். இவன்காலத்தில் டேல்லி வனாந்தரத்தைப்போலிருந்ததாம். ஜனங்கள் தங்கள் வீடுவாயலைவிட்டு இதர ஊர்களுக்குப் போய்விட்டார்களாம். ஆயினும் இங்குள்ள கட்டடங்கள்

பார்க்க இப்பொழுதும் அழகுள்ளவைகளா யிருக்கின்றன. இவன் பிள்ளை பேரோஷா 1351-ம் வருஷம் பட்டத்திற்கு வந்தான். இவன் பேரோஷாபாத் என்கிற பட்டணத்தைக் கட்டிவைத்து இங்கேயேதான் வசித்துவந்தான். இவன் கல்விற் றேர்ந்திருந்ததுடன் சாமர்த்தியவானுகயிருந்து நீதிவழுவாமல் அரசு புரிந்துவந்தான். இவனுக்கு முன் அரசாண்டவர்களால் இம்சிக்கப் பட்டவர்களுக்கு நன்மை செய்துவந்தான். சட்டதிட்டங்களை ஒழுங்காக ஏற் படுத்தி அனுவசியமான வரிகளைத் தள்ளிவிட்டான். ஜனங்களுக்கு உபகார மாயுள்ள காரியங்களுக்கு அதிக திரவிய உதவி செய்துவந்தான். பேரோஷா பாத்திலுள்ள மசூதியின் சுவர்களில்தான் ஏற்படுத்திய சட்டதிட்டங்களை எழுதிவைத்தான். ஒரு பெரிய கால்வாய் வெட்டிவைத்தான். இவனுக்குப் பின் டேல்லி ஒன்றுக ஆளப்படவில்லை. மகமத் டோக்லாக் காலத்தில் டிசம் பர்மீ 1398-ம்வு தைமன் என்கிறவன் இந்தியாவின்மீது படை எடுத்து வந்தான். ஒவ்வொரு கிராமம், பட்டணம் முதலியவைகளில் புகுந்து கொள்ளையடித்து ஜனங்களை இம்சித்துவந்தான். அநேக பட்டணங்களை யழித் தான். அநேகரைக் கொலைபுரிந்தான். ஜனங்கள் இவனுக்குப் பயந்து தங்கள் ஊரைவிட்டு வேறு பிரதேசங்களுக்கு ஓடிப்போனுர்கள். டெல்லி பட்ட ணத்திற்கு கடைசியாக இக்கல் நெஞ்சுள்ள பாதகன்வந்து சக்ரவர்த்தியா னுன். உடனே டெல்லியிலுள்ள ஜனங்களைக் கொல்லவும் அப்பட்டணத் தைக் கொள்ளை யடிக்கவும் உத்திரவு செய்தான். ஒரு நொடியில் டெல்லி முழுவதும் பிணம் நிறைந்த சுடுகாடாய்விட்டது. தான் இவ்வித ஜெயம் கொண்டதற்காக 5 தினம் பண்டிகையாகக் கொண்டாடினுனும். வேண்டிய பொருள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு இவ்வித அக்கிரமம் செய்து விட்டு திருப்திபடைந்து அவ்வூரைவிட்டு தொலைந்தான் மகாபாவி. பெரோ ஷாவால் அழகாக கட்டப்பட்டிருந்த மசூதியையிடித்து அதன் சாமான்களை சமர்க்கண்டுக்குக் அனுப்பிவிட்டான். இவன் டெல்லியை விட்டுப்போனதும் இரண்டு மாதகாலமாக அரசாளுபவரும் எவரும் கிடையாது. குடித்தனம் செய்வோரும் கிடையாது. டெல்லி பாழடைந்து இருந்தது.

பின்பு மகமதின் பந்துக்களில் ஒருவனுகிய ஈக்பால் என்பவன் டெல்லி க்கு வந்து அதைத்தன் வசமாக்கிக்கொண்டான். ஜனங்களும் படிப்படியாக வரத்தலைப்பட்டார்கள். சிக்கிரத்தில் டெல்லிபட்டணம் நிரம்ப ஜனங்கள் வந்து குவிந்துவிட்டார்கள். மகமது 1412-ம் வருஷத்தில் மரணமடைந்தான். முகலாயரின் அடிமைகள் 1450ம்-வு வரையில் டெல்லியை ஆண்டுவந்தார் கள். பின்னிட்டு லோடி வம்சத்தார் இதைக்கைப்பற்றிக் கொண்டார்கள். புல் லால் லோடி என்பவன் சிகண்டர் லோடிக்கு திரண்ட இராஜ்யங்களைவைத்து விட்டு இறந்துபோனுன். 1503ம்-வு சிகண்டர் பட்டத்திற்குவந்து இந்து ஆலயங்களை இடித்ததுமன்றி யாத்திரை செய்வோரையும் தடுத்துவந்தான். ஆக்ராவை பிரதான பட்டணமாக்கிக் கொண்டான். ஆயினும் டேல்லி சிறப் பாகவே விளங்கிவந்தது. இவன் குமாரனும் இவனுக்குப் பின் குரூரமுள்ள வனுயிருந்தான். இப்படி இவனிருந்தமையால் டெல்லிராஜ்ய முழுவதிலும் கலகமுண்டாயிற்று. பேபர் இச்சங்கதியைக் கேள்வியுற்று இதுதான் தக்க சமயம என்று அறிந்து பெருத்த சைனியத்துடன் உடனே புறப்பட்டு டெல்லிக்குவந்து இப்ராஹீம் லோடியுடன் 1526-ம்வு பானிபட்டில் யுத் தம் புரிந்தான். இப்ராஹீம் தோல்வியடைந்து யுத்தகளத்தில் மடிந்தான்.

டெல்லி பேபர் கைவாசமானது, ஆக்ராவும் பிடிக்கப்பட்டது. மொகலாயரது ராஜாங்கம் ஸ்திரமானது.

இவனுடைய புத்திரன் ஹூமாயூன் டெல்லிக்கு வந்து பழையக்கோட்டையைப் பழுதுபார்த்து கட்டிவைத்தான். இது பழைய இந்தரப்ரஸ்த மிருந்தயிடத்தி லிருக்கிறது. ஷேர்ஷா என்கிற ஆப்கன் ஹூமாயூனுடன் 1540-ம்ஞு யுத்தம் புரிந்து அவனைத் தோற்கடித்து காபூலுக்கு ஓடும்படி துரத்திவிட்டான். அச்சமயத்தில் டேல்லியைச் சுற்றி ஒரு புதிய சுவற்றைக் கட்டிவைத்தான். இப்பொழுதும் இது தென்படுகிறதாம். இவனுடைய குமாரனும் இவனுக்குப் பின்வந்தவர்களும் சாலிம்கார் என்கிறகோட்டையைக் கட்டிவைத்தார்கள்.

ஹூமாயூனுடைய கோரி வெகு நன்றாக கட்டப்பட்ட கட்டடம். 1556-ம்ஞு ஆக்பர் சக்ரவர்த்தி பட்டத்திற்குவந்தார். இவர் இந்துக்களையும் மகமதியர்களையும் சேர்க்க மிக்க முயன்றுவந்தார். பட்சபாதமின்றி சாமர்த்தியமும் கல்வி அறிவு முள்ளவர்களுக்கு உயர்ந்த வேலையைக் கொடுத்துவந்தார். வித்வான்களை ஆதரித்துவந்தார். இவருடைய பிள்ளை ஜிஹான்கீர் சக்ரவர்த்தியாயிருந்தும் தன் தகப்பனாரைப்போல் நற்பேர் எடுக்கவில்லை. இவன் குமாரன் ஷாஜிஹான் அநேக ஏற்பாடுகள்செய்தான். இப்பொழுது டெல்லி என்றுள்ள நகரத்தை 1683-ம்ஞு ஸ்தாபித்து இதற்கு ஷாஜஹனபாத் என்கிற பெயரையிட்டான். தனக்கு வேண்டிய அரமனையைக் கட்டிவைத்தான். மேலும் ஜம்மா மஸ்ஜிட் என்றதையும் கட்டிவைத்தான். இவன் இளைய குமாரனாகிய ஔரங்கசீப் பட்டத்திற்குவந்து இங்கேயேயிருந்து அரசு புரிந்துவந்தான். இவன் காலத்தில் பல சண்டைகள் நடந்துவந்தன. சிவாஜி அடிக்கடி மொகலாய அரசாட்சியை க்ஷீணதசைக்குக் கொண்டுவர முயன்றுவந்தான். ஔரங்கசீப் 1707-ம்ஞு இறந்தான். இவன் பிள்ளை பஹதூர்ஷா பட்டத்திற்குவந்து 5 வருஷமானபின் இறந்துவிட்டான். பின்னிட்டு 4 சக்ரவர்த்திகள் கொலைபுரியப்பட்டார்கள்.

மகமத்ஷா என்பவன் 1718-ம்ஞு ஆளத் தலைப்பட்டு 30 வருஷகாலம் ராஜ்யபாரஞ் செய்துவந்தான். மொகலாய வம்சத்துக்கு இவன்தான் கடைசி. இவன்தான் உண்மையான சக்ரவர்த்தியா யிருந்தான். இவன் ஆளுகையால் ராஜ்யம் பாகங்களாகப் பிரிபட்டுபோயிற்று. சுதேச மன்னர்கள் தங்களிஷ்டப்படியிருக்க ஆரம்பித்துவிட்டார்கள். எங்கும் சமாதானமின்றி கலகமே பரவியிருந்ததாம். மகாராஷ்டரர்கள் ஒரு பக்கம் கிளம்பி இவ்விராஜ்யத்தின் சில பாகங்களைப் பிடித்துக் கொண்டார்களை. நாதர்ஷா 1739-ம் வருஷம் படையெடுத்து வந்தான். இவனே தாமர்லேனைப்போல் அடாத காரியங்களைச் செய்துவந்தான். 58 நாள் வரையிலும் இரக்கம் சிறிதுமில்லாத நாதர்ஷாவும் இவனைச்சேர்ந்த பேர்சியா தேசத்தவர்களும் தனவந்தர்களையும், ஏழைகளையும் யாதொரு வித்யாசமின்றி கொள்ளையடித்து வந்தார்கள். இப்படி செய்ததமையால் இவர்களுக்கு 9 லக்ஷம் பவுன் மதிப்புள்ள சொத்துக்கள் கிடைத்தனவாம். மயிலுள்ள சிம்மாசனத்தையும் இவன் டெல்லியிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டான். உடனே பற்பல கலகங்கள் நடந்துவந்தன. இக் கலகங்களை யெல்லாம் இங்கிலீஷ் துரைத்தனத்தார் அடக்கி டெல்லியைத் தங்கள்கைவச மாக்கிக்கொண்டு அதைக் காலக்கிரமத்தில் சரியான நகரமாகச்செய்து சண்டை சச்சரவுகளின்றி சமாதானமே எங்கும் குடிகொண்டிருக்கும்படி 1858-ம் வருஷம் செய்தார்கள்.

1876-ம் வருஷத்தில் காலஞ்சென்ற 7-வது எட்வர்ட் சக்ரவர்த்தியார் இப்பட்டணத்தை வந்துபார்த்தார்கள். 1877-ம் வருஷம் ஜனவரி௴ 1௳ காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியார் இந்தியா சக்ரவர்த்தினி என்று இங்கு அறிக்கை செய்யப்பட்டது. இதே திவ்யஸ்தலத்தில் 1903-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு வைசிராயாயிருந்த லார்ட்கர்ஸன் ஒரு டர்பார் கூட்டி வைத்து காலஞ்சென்ற 7-வது எட்வர்ட் இந்தியா சக்ரவர்த்தி என்று பைரங்கமாக அறிக்கையை வெளியிட்டார். 1906-ம்௵ நமது அரச சக்ரவாத்தியும், சக்ரவர்த்தினியும் இந்தியாவுக்கு வந்தபொழுது இத்திவ்ய ஸ்தலத்தையும் கண்டு களித்துச் சென்றார்கள். இப்பொழுதோ யுதிஷ்டிரர் காலம்முதல் பரம்பரையாய் அரசுபுரிந்து சக்ரவர்த்திகளிருந்த இந்த புராதான சரித்திர சம்பந்தமான நகரக்குவந்து டர்பார் கூட்டிவைத்தது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியை யுண்டாக்கிவருகிறது. மேலும் இதை இந்தியாவுக்குப் பிரதான பட்டணமாகச் செய்ததும் சிறந்த காரியமே. இவர்களது ஆட்சி நீடித்து செழித்து ஓங்குமாறு ஜகதீசனைப் பிரார்த்திக்கின்றோம்.

☞ பத்திராதிபர்.

மத்ஸ்யராஜன்.

(Copy - right Reserved.)

ஒருகாலத்தில் ஒரு அரசனும் அவன் மனைவியும் சுகித்து வாழ்ந்துகொண்டிருந்தார்கள். இவர்களுக்கு முதலில் ஒரு ஆண்குழந்தை ஜனித்தது.



இது மெல்லிய தேகமுடையதாயும் சிறியதாயுமிருந்தது. குழந்தைக்கு இரண்டு கண்களில்லை; ஆனால் இதன்நெற்றியின் நடுவில் ஒரு கண்மாத்திரமிருந்தது. ராஜனும் ராணியும் மிகவும்வருந்தினார்கள். கடைசியாகவிதியின் பயனை எவரும் வெல்லக்கூடாதென்பதையுணர்ந்து இக்குழந்தையைச் செவ்வனே ராஜவைபவத்துடன் வளர்த்திவந்தார்கள். சிலகாலஞ்சென்றபின் இன்னொரு ஆண்குழந்தை ராணியாருக்கு ஜனித்தது. இக்குழந்தை மிக அழகுள்ளதாயிருந்தது. தாய் தந்தையர்கள் மிகுந்த ஆநந்தங்கொண்டு இக்குழந்தையை மிக்க அன்புடன் வளர்த்திவந்தார்கள். மூத்த பிள்ளைக்கு வயது 5 ஆனதும் கல்விகற்று வரத்தக்க ஏற்பாடு செய்தார்கள். இவன் கல்விகற்று ராஜனுக்குரிய யுத்தபயிற்சி, வேட்டை

ஆடல் முதலியவைகளிலும் பழகிவர ஆசைகொண்டான். ஆனால் சாமர்த்தியமும், சுறுசுறுப்பும், புத்தி கூர்மையுமில்லாமையால் கெட்டிக்காரனாகவில்லை. தர்மகுணம் இவனிடத்தில் கிடையாது. தயை என்பதுமில்லை. கல் நெஞ்சுள்ளவன். துஷ்டசெய்கை செய்வதில் பிரியமுள்ளவன், கர்வமுடையவன்.

இளையவனோ வயதாக ஆக சுறு சுறுப்புள்ளவனா யிருந்தான். புத்தி சாதுர்யமாய் யாவரிடத்திலும் பேசுவான். இவனுக்கு வயது ஐந்தானதும் இவனையும் படிக்கவைத்தார்கள். இவன் சகலகலைகளையும் கற்று மிக்க புத்திமான் என்ற பெயரையடைந்தான். சாந்தகுணம் பொருந்தியவன். பெரியோரிடத்தில் மிக்க மரியாதை இவனுக்குண்டு. கடவுளைப்பூசிப்பான். நற்காரியங்களைச்செய்துவருவான். தானதர்மம் செய்வதில் கர்ணனென்றே இவனைச் சொல்லலாம்.

மூத்தவனுக்கு விவாகவயது வந்தது. இவனது பெற்றோர்கள் தங்கள் உறவினர்களிலொரு பெண்ணரசியை இவனுக்கு மனைவியாக நிச்சயம்செய்து விவாகம் செய்துவைத்தார்கள். இப்பெண்ணோ இவனைப்போன்றவள். இவளுக்கு மந்திர வித்தைதெரியும், எவருக்கும் அடங்கியிருக்கமாட்டாள். தன் கணவனை தன்னிஷ்டப்படி நடந்துவரும்படி செய்துவிட்டாள். இவர்கள் சுகமாக வேறொரு அரண்மனையில் சுகித்து வாசஞ்செய்து வந்தார்கள்.

விவாகமாய் சிலகாலஞ்சென்ற பின்பு இவன் தந்தை யாருக்கு ராஜ்யத்தையளித்துப் பட்டாபிஷேகம் செய்துவைக்கலாமென்பதை யோசிக்கலானான். தனது மனைவியிடத்தில் "நமது மூத்தமகன் குள்ளன். விகார முகமுடையவன், துஷ்டன், நல்ல எண்ணமே இவனிடத்திலில்லை. இரண்டு கண்களுமில்லை. ஒருகண் தான் இவன் நெற்றியிலிருக்கிறது. நமது பிரஜைகள் இவனுக்குக் கீழ்படிந்து நடக்கமாட்டார்கள். இவனும் அரசனாய்விட்டால் ஜனங்களை இம்சிப்பான், நீதிவழுவாமல் அரசுபுரியான். நமது இளைய குமாரனோ இப்பொழுது யாவராலும் நல்லவனென்றும் தர்மசீலனென்றும் புகழப்பட்டுவருகிறது உனக்கும் தெரியுமே. அவன் இராஜகுமாரனைப்போல் அழகும், கல்வி, நற்குணங்களும் பொருந்தியவன். ஆகையால் அவனுக்குஇந்த ராஜ்யம் உரியது. அவனுக்குத் தான் பட்டாபிஷேகமும்செய்யக் கருதியிருக்கிறேன். உனது விருப்பம் என்ன" வென்றான்.

ராணி:—தங்கள் சொன்னவைகள் யாவும் எனக்குச்சம்மதமே; அவ்விதமே செய்யுங்கள்.

மூத்தவன் 'இவர்கள் இவ்விதம்பேசினதைக்கேட்டு' மிகக்கோபங்கொண்டான். உடனே தனது மனைவியிடத்திற்குப்போய் மத்தியமாவதி! "நான் மூத்தவனல்லவா? எனக்கல்லவா இந்த இராஜ்யம் கிடைக்கவேண்டும்." முழுமையும் கிடைக்காவிட்டாலும் சரி பாதியாவது எனக்கு கிடைக்கவேண்டாமா? என்று சொன்னான்.

மத்தியமாவதி ஒருமந்திரவாதி: தனது கணவன் சொன்னதைக்கேட்டு கூடியமட்டும் இராஜ்ய முழுவதையும் தனது கணவனுக்கு வரும்படி தன்னாலியன்றளவு செய்ய தீர்மானித்து, தாங்கள் இதைக்குறித்து மனக்கவலையடையவேண்டாம். நான் என் மந்திரசக்தியால் செய்துவிடுகிறேன். ஆனால் நான் சொல்லுகிறமாதிரி தயைசெய்து செய்யவேண்டுமென்றாள்.

கணவனும் சரி என்னவே, தங்கள் சகோதரனை நமது அரமனையில் புசிக்க வரவழையுங்கள். போஜன முடிந்தபின் நீங்களிருவரும் மெத்தையின் முகப்பில் உட்கார்ந்து தாம்பூலம்போட்டுக்கொள்ளுங்கள். நான் உடனே

அவனை ஒரு மீனாகச்செய்து விடுகிறேன். பின்பு அவனை (அந்தமீனை) இங்குள்ள நதியில்கொண்டு போய்விட்டுவிடலாம். அவனைப்பற்றிய கவலை நமக்கு இருக்கவே இராது,'' என்றாள்.

துர் எண்ணமும், துராசையுமுள்ள மூத்தவன் தன் மனைவியின் கெட்ட யோசனையின்படி நடக்க சம்மதித்தான். உடனே தனது தம்பியைத் தனது அரமனையில் புசிக்க வரும்படி கேட்டுக்கொள்ளவே, அவனும் சாதாரணமாய் வந்தான். இருவரும் நல்ல உணவைப்புசித்த பின் மெத்தையின் முகப்பில் உட்கார்ந்துகொண்டு இப்படத்திலிருப்பதுபோல ஒருவித புகையைக் குடித்துக்கொண்டிருந்தார்கள். மூத்தவன் மனைவி மத்தியமாவதி மெத்தைமேல் மெதுவாகச்சென்று தன் மந்திர சக்தியால் சாம்பலை எடுத்து இளையவன் மீது தூவினாள். ஒரு சிறிய மீனாய் விட்டான். இவன் தமையன் இம்மீனை எடுத்து பக்கத்திலுள்ள ஆற்றில் போட்டுவிட்டு அரண்மனைக்கு வந்து தன் மனைவுடன் சந்தோஷத்துடன் இனி நமக்கு யாதொரு பயமில்லையென்று சொன்னான்.

மூத்தவன். இளையவன்.

இவன் தன் உருவ மாறி மீனாக ஜலத்திலிருந்த போதிலும் தனக்கு இவ்வித கெடுதி தனது மைத்துனியால் விளைந்ததென்று அறிந்துகொண்டு வெகு தூரம் போய் விட்

டான். தனது இராஜ்யத்திற்கு வெகு தூரத்தில் ஒரு அரசன் நீதிவழுவாமல் அரசுபுரிந்து வந்தான். இந்த நதியும் அவ்வரசனது ராஜ்யத்தில் ஓடிக்கொண்டிருந்தது. இந்த மீன் இங்குவந்தது. ஒரு மீன் பிடிப்பவன் தன் வலையை வீசி மீன் பிடித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது இந்த மீன் அவ்வலையில் சிக்கிக்கொண்டது.

செம்படவன் இந்த மீன் மிக்க அழகாயிருந்ததைக் கண்டு ராஜ அரமனைக்கு இதை எடுத்துக்கொண்டுபோனன். அங்கேவலையிலிருந்த மீன்கள் எல்



லாம் இறந்து போயிற்று. ஆனல் இந்த ராஜமீன் உயிருடனிருந்தது. இதையும் செம்படவன் கொல்லப்போனன். அங்கிருந்த வேலைக்காரர்களில் ஒருவள் அதைக் கொல்லாதே. எங்கள் ராணியாருக்கு அதை ஒரு பாத்திரத்தில் வைத்துக் காண்பிக்கிறேன். இது எங்கள் ராணியாருக்கு சந்தோஷத்தை யுண்டுபண்ணும் என்று சொல்லி அவனைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

இத்தேசத்து அரசனுக்கு குழந்தைகளில்லை. ராணி தனக்கு குழந்தைகளில்லையே யென்ற ஏக்கத்தால் எப்பொழுதும் விசனமுற்றிருக்கிறள். இம்மீன் துள்ளி விளையாடுவதைக் கண்டாவது சிறிது நேரம் ராணி சந்தோஷமாயிருப்பார்களென்று நம்புகிறேன் என்று சொல்லி இம்மீனை நீருள்ள ஒரு பாத்திரத்தில் வைத்து இதை எடுத்துக்கொண்டு ராணியிடத்தில் சென்று "ராணியாரே! இதோ உயிருள்ள அழகான மீன் இப்பாத்திரத்தில் துள்ளி குதித்துக்கொண்டிருப்பதைப் பாருங்கள்" என்று அப்பாத்திரத்தைக் காண்பித்தாள்.

அந்த அழகான சிறிய மீன் தெள்ளிய நீரில் விளையாடுவதைக் கண்டபொழுது அதிகச் சந்தோஷமடைந்தாள். உடனே அதனிடத்தில் பிரியம்

விழுந்தது. அதை ஜாக்கிரதையாக வைத்து அதற்கு ஆகாரம் ஒவ்வொரு தினமும் தப்பாமல் போட்டு வந்தாள். இந்த மீன் பெரிதாயிற்று. இப் பாத்திரம இதற்குச் சரிப்படவில்லை. இதை ராணி கண்டு ஒரு பெரிய மரத் தொட்டியில் வைத்து காப்பாற்றி வந்தாள். தினம் இருமுறை இதற்கும் அன்னம் போட்டு வந்தாள். இன்று முதல் இதை மத்ஸ்யராஜன் என்று யாவரும் கூப்பிடவேண்டும் என்று சொன்னாள். நாளாக ஆக மீன் பெரியதாக வளர்ந்து வந்தமையால் இந்த மரத்தொட்டியும் இதற்குப்போதாமல் போயிற்று. ராணி இப்படி யிருப்பதைக் கண்டு இதற்கு ஒரு குளத்தைப்போல் — சென்னை சமுத்திரக்கரையில்—பலவகை மீன், ஆமை, நீர்ப்பாம்பு முதலியவைகளைவைத்துக் காப்பாற்றிவருவதுபோல்—ஒரு கட்டடம் கட்டிவைத்து அதில் இம்மீனை விட்டாள். இக்குளத்திற்கு நதியிலிருந்து தண்ணீர் தினம் வரும்படியும் செய்வித்தாள். அழுக்குத் தண்ணீர் வெளியில் செல்லவும் ஏற்பாடு செய்வித்தாள்.

இதற்கு எப்பொழுதும் புதிய நீரிருந்த போதிலும், இடமும் வேண்டியளவு யிருந்தபோதிலும், தன்னை இப்படி அடைத்து வைத்திருப்பது பிடிக்கவில்லையோவென்றும், தான் சுயர்ச்சியாக தனது அரமனைக்குச் சமீபத்தில் பிரகாசத்துடன் அழகாக ஓடும் நதியில் நீந்திக்கொண்டிருக்க விரும்புகிறதோவென்றும் சிற்சில வேலைகளில் நினைத்தாள். எங்கே இதிலிருந்து நீரில் மெதுவாக வெளியிற்போய் விடுமோ வென்றும் பயந்தாள்.

ஒருநாள் ராணி மீனிருக்கு மிடத்திற்குப் போய் "ஓ மத்ஸ்யராஜனே! இந்த யிடம் உனக்கு சௌக்யமாயிருக்கிறதா" வென்று இம்மீனைக் கேட்டாள். ஏன் மேற்கூறியவாறு கேட்டாள் என்றால் ராணி இம்மீனை அதிகமாக விரும்பிவந்தாள். இது உண்மையாகவே சுயர்ச்சியாகயிருக்க விரும்பினால் அதன் இஷ்டப்படி அதை விட்டுவிட நிச்சயம் செய்துகொண்டாள்.

என்னுடைய பிரியமுள்ள ராணி அம்மா! நான் சௌக்யமாயிருக்கிறேன். அதற்கு யாதொரு குறைவுமில்லை; ஆனால் நான் தனிமையாக இங்கு இருக்கிறேன். எனக்குத் துணை ஒருவரும் இல்லை, ஆகையால் எனக்கு அழகு வாய்

ந்த சிறிய மனைவியை மாத்திரம் அளித்தால் நான் இன்னும் அதிக சந்தோஷ மாயிருக்கிருப்பேன்'' என்றுமீன் சிறிதுநேரம் யோசனைசெய்து சொல்லிற்று.

தனது பிள்ளையைப்போல் பாவித்து மிகவும் அன்பாய் மத்ஸ்யராஜனைக் காப்பாற்றிவருகிற ராணி அது பேசினதைப் பார்த்து அதிசயங்கொண்டு கூடிய சீக்கிரத்தில்நீ கோரிய வண்ணம் நான் செய்து முடிக்கிறேன்'' என்றாள். இதை மணம் புரிய ஒருபெண்ணும் தடைசொல்வாள் என்பதை ராணிசிறிதும் நினைக்கவேயில்லை.

'எனக்கு வேண்டியது அதுதான்' என்றது மத்ஸ்யராஜன் என்ற மீன்.

"நதிக்குச் சென்று அதில் நீந்தி விளையாட உனக்குப் பிரியமில்லையா" வென்று ராணி கேட்டாள்.

'என் தாயே! எனக்கு நிச்சயமாகவே பிரியமில்லை' என்றது மீன்.

இவ்விதம் இந்த மீன் மனிதனைப்போல் வாய்திறந்து பேசியது ராணிக்கு ஆச்சரியத்தை யுண்டாக்கியது. இந்த மீன் இப்படி பேசியதைப்பற்றி ஆச்சரியங்கொண்டாளே தவிர மீன் இவ்விதம் பேசுமாவென்றும், தனது ஜாதி மீன்களுடன் இருந்து வர சிறிதும் இது ஏன் விரும்பவில்லை என்றும் யோசிக்கவும் வில்லை. ராணிக்குத் தெரியவும் தெரியாது.

"உடனே உனக்கு ஒரு மனைவியை சம்பாதித்து கொடுக்கிறேன். அவளுக்கும் ஒரு அரை கட்டிவைக்கிறேன்'' என்று வாக்களித்தாள்.

ராணி குளத்திற்கு அடுத்தாற்போல் ஒரு சிறு அரையைக் கட்டும்படி உத்திரவு செய்யவே, அதுவும் கட்டி முடிந்தது. ஆயினும் மனைவி எப்படி கிடைக்கும்? எவள் மீனை விவாகம் புரிந்துவாழ விரும்புவாள்? இது சுலபமான வேலையா? மத்ஸ்யராஜன் ராணிக்குப் பிரியம் வாய்ந்த மீனாயிருக்கலாம்.

நாங்கள் எங்கள் பெண்மணிகளை அதற்கு மனைவியாக விவாகம் செய்துவைக்கமாட்டோம். இது ஒரு பெரிய ராக்ஷத மீனாயிருக்கலாம். ஒரு பெண்ணை விழுங்கி புசிக்க விரும்பியிருக்கிறதுபோல் எங்களுக்குத் தோன்றுகிறது'' என்றார்கள் ஜனங்கள்.

ராணி தூதர்களைப் பலபாகங்களுக்கு அனுப்பினாள். இவர்கள் 'ஏழைகளையும் தனவந்தர்களையும் கண்டு ஒரு மீனுக்கு விவாகம் செய்யவேண்டியிருக்கிறது. உங்கள் புத்திரியை அம்மீனுக்கு மனைவியாக செய்விக்க இஷ்டமாவென்று கேட்டார்கள். 7 அல்லது 8 குமாரத்திகளையுடைய தாய்தந்தைகளையும்' கேட்டார்கள். முன் ஜனங்கள் சொல்லிய மாதிரி "உங்கள் மத்ஸ்யராஜனுக்கு எங்கள் பெண்மணிகளில் ஒருவரையும் கொடுக்கமாட்டோம்" என்று பதில் சொன்னார்கள். இவ்விதம் ஒருவருமிஷ்டப்படாததை ராணிக்கு தூதர்கள் வந்து சொன்னார்கள்.

கடைசியாக ராணி மத்ஸ்யராஜனுக்கு மனைவியாக தன் மகளை எவன் கொடுக்க விரும்புகிறானோ அவனுக்கு ஒரு பெரிய பை நிரம்ப பொன் கொடுப்பதாகத் தெரியப்படுத்தினாள்.

அரமனைக்குச் சமீபத்தில் நதிப்பக்கத்தில் ஒரு குடிசையிருந்தது. அதில் ஒரு ஏழை தனது இருபுத்திரிகளுடன் கஷ்ட ஜீவனஞ் செய்துகொண்டு வசித்துவந்தான். இவன் இச்சங்கதியைக் கேள்வியுற்று பண ஆசை கொண்டு எனது மூத்தமகளை இட்டுக்கொண்டு போவென்று தூதனிடத்தில் சொன்னான். அப்படிச் செய்வதால் நான் தனவானாய் விடுவேன். என் குமாரத்தி இப்பொழுதிருக்கும் ஸ்திதியைவிட ஈனஸ்திதியிலிருக்க முடியாது என்று மனதில் நினைத்துக்கொண்டான்.

"அவள் எங்கே ?" என்று ராணியின் தூதன் கேட்டான்.

நதிக்கரையில் ஸ்நாநம் செய்துகொண்டிருக்கிறாள். இவள் எனது மூத்த மனைவியின் புத்திரி. இவளுடைய இளைய தாயார் இவளைக்கஷ்டமான வேலைகளைச் செய்யச் சொல்லுகிறாள். புசிக்கப்போதுமான ஆகாரம் கொடுக்கிறதே யில்லை என்று சொன்னான் அந்த ஏழை மனிதன்.

ஏழைப் பரதேசியின் இரண்டாவது மனைவி கோபத்துடன் "அவளுக்கு வேண்டியதைவிட அதிகமாகத்தான் கொடுக்கிறேன்" என்று சொன்னாள். "ஆயினும் அவளை இட்டுக்கொண்டுபோங்கள். அவள் உங்கள் வீட்டுக்கு வருவதைக் குறித்து நல்வரவு கூறுங்கள், எனக்குச்சம்மதமே; மத்ஸ்யராஜன் அவளைப் புசித்துவிட்டால் எங்களைப்பிடித்த சனியன் தொலைந்துவிட்டதென்று சந்தோஷமா யிருப்போம்" என்றாள்.

தூதன் அந்த ஏழை மனிதனுக்கு ஒரு பெரிய பை நிரம்ப பொன்னை வைத்துக்கட்டி கொடுத்துவிட்டு, பெண்ணைக்கூட்டிக்கொண்டுபோக நதிக்குச் சென்றான். தண்ணீர் ஓரத்திலுள்ள படிக்கட்டுகளில் தனது துணியைக் கசக்கிக்கொண்டிருந்த ஒரு அழகான பெண்ணைக்கண்டான். அவளிடத்தில் எல்லாவிஷயங்களையும் ஆதிமுதல் அந்தம் வரையில் தூதன் சொன்னான்.

இதைக் கேட்டபொழுது துக்கப்பட்டு அழுது ஒன்றுமறியாத சிறு பெண் சிறிதுநேரஞ்சென்ற பின்பு மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு "ஐயா! சிறிதுநேரம் காத்திரும், இந்நதிப்பக்கத்தில் வசிக்கும் எனது பழமையான சகியைப்பார்த்துவிட்டு நான் வேறு ஊருக்குப்போகிற சங்கதியைச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு வருகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

"அந்தத் தோழி யார்? நாம் தாமதம்செய்யாமல் துரிதமாக அரமனைக்கு வந்துசேரும்படி ராணியார் சொல்லியிருக்கிறபடியால், நான் கேட்கிறேன்" என்றான் தூதன்.

"ஏழுதலை நாகம் இங்கிருக்கிறது. இதுதான் எனதுதோழி. எனதுகுழந்தைப்பருவமுதல் இது எனக்குத்தெரியும்" என்றாள் இப்பெண்மணி. இவள் பெயர் லலிதாங்கி.

தூதன் "சரி, அப்படியேசெய். கூடிய சீக்கிரத்தில் உன்தோழியுடன் பேசியபின் வந்துவிடு" என்றான்.

நதிக்கரையின் ஓரமாக சுமார் 60 அடி தூரம் சென்றாள் லலிதாங்கி. பாம்பு புற்றிலிருந்து தனது ஏழுதலைகளையும் வெளியில் தெரியும்படி வைம்

துக்கொண்டு தன்னிடத்திற்கு வரும் லலிதாங்கியைப் பார்த்து "லலிதா! அழாதே, பயப்படாதே. நீ விசனப்படும் விஷயங்களை யாவும் எனக்குத் தெரியும். எனது புற்றிற்கு வெளியிலுள்ள கற்களில் எண்ணி மூன்று கற்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு உன் புடவையின் நுனியில் முடித்துவைத்துக்கொள். மத்ஸ்யராஜன் உனக்கு சமீபத்தில் வருவதைப்பார்த்தவுடன் நீ அதன்மீது ஒருகல் விட்டெறி. இது அதன்மேல்பட்டால் அது தண்ணீருக்கடியில் முழுகிவிடும். சற்று நேரம் சென்றபின் தண்ணீருக்குமேல் வரும். அப்பொழுது இரண்டாவது கல்லையெடுத்து அதன்மேல் அடிபடும்படி பயப்படாமல் விட்டெறி. அப்பொழுது அந்த மத்ஸ்யராஜன் ஜலத்தின் அடிபாகத்திற்குப் போய்விடும். மூன்றும் தடவை அதுவெளியில்வரும். மூன்றுவது கல்லையும் அதன்மேல்போடு. உடனே ஒரு அழகுவாய்ந்த ராஜகுமாரனாக மாறிவிடும் அந்த மீன்" என்றது.

லலிதாங்கி:—அது ஒரு உண்மையான மீன் இல்லையா?

ஏழுதலைநாகம்:—இல்லை, அதுஉண்மையான மீனல்ல. அவன் ஒரு இராஜபுத்திரன், அவனை அவன் தமயன் மனைவி அவ்விதம் மந்திரத்தால் செய்திருக்கிறாள். உன்னால் தான் அவன் தனது சுயரூபத்தை யடைவான். மேலும் நீயே இவனுக்கு மனைவியாய் விடுவாய்.

எப்படி அதன்மேல் படும்படி கல்லை விட்டெறிவது? இது என்னால் முடியாத காரியம் என்று பயந்த முகத்துடனும், கண்ணீருடனும் நின்றாள். அந்தப் பாம்பு, "என் பிரிய சகி, நீ ஒன்றுக்கும் அஞ்சாதே. உன் காரியம் கைகூடும். அது முடியுமாறு நான் செய்திருக்கிறேன். நீ தைரியமாகப் போ" என்று சொல்லிற்று.

லலிதாங்கி தனது கண்களிலிருந்து வடிந்து வந்த நீரைத்துடைத்துக்கொண்டு, தூதனுடன் ராஜமாளிகைக்குச் சென்றாள்.

லலிதாங்கி வசித்து வர ஒரு தனிமையான அரை குளத்தை ஒட்டி கட்டப்பட்டிருந்தது. லலிதாங்கி அரமனைக்கு வந்தவுடன் ராணி அவளை அணைத்து முத்தமிட்டு, "அம்மா! நீ தான் இந்த மத்ஸ்ய ராஜனுக்குத் தகுந்த மனைவி" என்று சொன்னாள்.

லலிதாங்கி ராணியிடத்தில் விடை பெற்றுக் கொண்டு தனக்கு எற்படுத்தியுள்ள இடத்திற்குச் சென்றாள். இங்கு சிறிது காலம் வசித்து வந்தாள். இவள் அரமனையில் கால் வைத்தது முதல் இங்குள்ளவர்களெல்லாம் இவளிடத்தில் மிகப் பிரியமுடையவர்களாயிருந்தார்கள். மத்ஸ்யராஜனைப் பற்றிய பயமும், அகண்ட குளத்தின் பயமும் இவளது மனதில் உதித்திராவிடின் லலிதாங்கி அதிக சந்தோஷமுடையவளாயிருந்திருப்பாள்.

இவள் தனிமையாகவே தன் அரைலிருக்க வேண்டியிருந்தது. என்ன செய்வாள் சிறுபெண்! சிலநாள் வெகுநேரம் கையில் கற்களை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். அப்பொழுது அவளது மனது துடி துடிக்கும். 'பொறுமையுள்ளவர்கள் பூமியை ஆளுவார்கள்' என்பதற்கிணங்க கடவுளைத்தியானம்பண்ணிக் கொண்டிருப்பாள். எனக்கு சீக்கிரத்தில் நற்காலம் வரும்படி அருள்புரியவேண்டும் என்று கடவுளை வணங்குவாள். 'எண்ணாத எண்ணம் எல்லாம் எண்ணி எண்ணி எழை நெஞ்சம்'— என்று பலவாறாகப்பாடி கடவுளைத்தினம் துதி செய்து வருவாள்.

இவ்விதம் செய்துவருகையில் ஒருநாள் மத்ஸ்யராஜன் என்ற மீன் தண்ணீரைத் தனது சிறகுகளால் சப்தம் செய்துகொண்டு வேகமாமகத்திறந்தவாயுடன் தன்னை நோக்கி நீந்திக் கொண்டு வருவதைக் கண்டாள். லலிதாங்கி உடனே நடுநடுங்கினாள். "கதவைத்திற! என் மனைவியை நான் பார்க்க விரும்புகிறேன்" என்று மத்ஸ்யராஜன் சொல்லிற்று.

லலிதாங்கிக்கு காலிலிருந்து தலை உச்சி வரையிலும் மயிர் கூச்சம் உண்டானது. ஆயினும் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, கதவைத்திறந்தாள்.

மீன் வேகமாய் தன்னை நோக்கி வருவதைக்கண்டு ஒரு கல்லை எடுத்து அதன் மீது எரிந்தாள். அது அதன்மேல்படாமல் தொண்டைவழியாக வயிற்றுக்குள் போய்விட்டது. உடனே மீன்—நீரில் ஒரு கல்லைப் போட்டால் அது எப்படி அடியில் போய்விடுமோ அம்மாதிரி இம்மீனும்—அடிக்குப் போய்விட்டது.

இரண்டு மூன்று நிமிஷமானபின் வெளிக்கிளம்பி மீன் வந்தது. அப்பொழுது மிகுந்த கோபத்துடன் தனது வாலால் தண்ணீரை அடித்துக்கொண்டு நீந்தி வந்தது. தண்ணீர் லலிதாங்கி அரையின்மீது விழுந்துகொண்டேயிருந்தமையால் மரக்கதவுகள் கெட்டுப்போய் கீழே விழுந்துவிட்டன.

லலிதாங்கி முன்னைவிட அதிகமாகப் பயந்துவிட்டாள்.

பாபம்! லலிதா சிறிது நேரம் சென்றபின் இரண்டாவது கல்லை எடுத்து அதன் தலையில் படும்படி போட்டாள். மீன் உடனே உள்ளே போய்விட்டது. மூன்றும் தடவை மீன் வெகு கோபாவேசத்துடன் நீர் மட்டத்துக்குமேல், நீந்திக்கொண்டு வந்தது. மூன்றாவது கல்லை அதன்மேல் சரேலென்று எரிந்தாள். அக்கல் அதன்மீது பட்டதோ படவில்லையோ என்கிற திகிலையடைந்தாள் லலிதாங்கி. எப்படியும் ஒன்றும் அறியாத சிறு வாலிபப் பெண்தானே!

இத்தடவை மீன் உட்செல்லவில்லை; ஆனால் எழுதலை நாகம் சொல்லியபடி ஒரு அழகான ராஜகுமாரனாய்விட்டான்.

உடனே ஓடிவந்து நீயா என்னைக் காப்பாற்றினாய் என்றுசொல்லி அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்தான்.

என் பிரிய மாதே! உனக்கு வந்தனமளிக்கின்றேன். நீ என்னைக்காப்பாற்றினாய். இனிநாமிருவரும் விவாகம் செய்து கொண்டு சுகித்திருப்போமென்றான். உடனே இச்சங்கதிஅரமனை முழுவதும் பரவவே, ராணி துரிதமாக இவ்வாச்சரியத்தைக் காண ஓடிவந்தாள். மீன் தன் உருவமாறி இராஜ குமாரனாயிருப்பதைக் கண்டுகளித்தாள். உடனே தனது கணவனுக்கும் இவ்விருவர்களைக் காண்பித்தாள். இவர்களுக்குப் பிள்ளை யில்லையென்று முன்னமேயே சொன்னோ மல்லவா? ராஜாவும் ராணியும் இந்த மத்ஸ்யராஜனைத் தங்கள் புத்திரனாகவும், இப்பெண்மணியைத் தங்கள் மருமகளாகவும் பாவித்து இருவருக்கும் ஒரு சுபதினத்தில் விவாகமுகூர்த்தம் ஏற்படுத்தி விவாகம் செய்வித்தார்கள். இத்தம்பதிகள் இங்கேயே வசித்துவந்தார்கள். ராஜாவுக்கு வயதுவரவே, மத்ஸ்யராஜனுக்கு மகுடாபிஷேகம் செய்வித்தான். மத்ஸ்யராஜன் நீதி வழுவாமல் தன்னைக் காப்பாற்றிவந்த ராஜாராணி இவர்களைத் தன் பெற்றோர்களைப்போல் பாவித்து அவர்கள் சொற்களைத் தட்டாமல் நடந்து ராஜ்யத்தையும் ஆண்டுவந்தான். லலிதாங்கியும் நல்ல மனைவியாயிருந்து சுகித்து வாழ்ந்து வந்தாள்.

(முற்றிற்று.) C. S. R.

சமாசாரக்குறிப்பு.

சார்லஸ் டிக்கெஸ் என்னும் பெரிய அகஸ்ய நூலாசிரியன் தன்னுடைய நூல்களை யெழுதிய பேனாவை 300 ரூபாய்க்கு விற்றான்.

பெட்டைக்கோழிக்கு கொயினா என்ற மாத்திரையைக் கொடுத்தால் தினம் இரண்டு முட்டையிடக் கூடுமென்று பாஸ்ரன் என்ற ஓர் வைத்திய நிபுணர் கண்டு பிடித்திருக்கிறாராம்.

நூற்றாறு வயதுள்ள ஒரு ஸ்திரீ:—இங்கிலாந்தில் வசிக்கும் ஒரு ஸ்திரீ தனது 106-வது வயது தினத்தைக் கொண்டாடினாள். இவள் சோர்வில்லாமல் வேலை செய்கின்றாளாம்.

மண்ணெண்ணெயில் 2, 3, ஸ்பூன் எடுத்து பிளேக் வியாதியாயுள்ளவர்களுக்குக் கொடுத்தால் நலமாகும் என்று ஓர் பார்மியர் சொல்லுகிறார்.

அமெரிக்காவில் ஒரு பெரிய போஜன சாலையில் நான்கு வாரங்கள் சாப்பிட்ட ஒரு கோடீஸ்வரன் இந்த நான்கு வாரங்களும் தனக்கு உபகாரஞ்செய்த சேவகனுக்கு 15000 ரூபாய் கொடுத்துப்போனானும்.

ஒரு வேளை சாப்பாட்டுக்கு ரூபா 240. அமெரிக்காவிலொருவன் தன் சினேகிதர்களுக்கொரு விருந்து செய்வித்தான். விருந்து சாப்பிட்ட நபர் ஒன்றுக்கு 240 ரூபாய் விதம் ஓட்டல்காரனுக்கு கொடுத்தானும்.

மதிப்புள்ள எழுதுகோல்கள்:—எட்வர்ட் மஹாராஜா அவர்கள் தென்னாப்பிரிகாவுக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கும் விஷயமாய்க் கையெழுத்து செய்த பேனாவை அந்த ராஜாங்கத்தார் க்ஷேம நிதியைப் போல காப்பாற்றுகிறார்கள்.

போபால் மகாராணி:—இங்கிலாந்தில் நமது சக்ரவர்த்தியாருக்கு மகுடாபிஷேகம் நடைபெற்ற தினத்தன்று இவர்க்கு ஜி. ஸி. ஐ. இ. பட்டம் கொடுபட்டது. ஸ்திரீகளில் இப்பட்டம் முதல்முதல் பெற்றவர் இவரே ஆவார்.

பாரிஸ் உடன் படிக்கை காகிதத்தின் மேல் 1856-ம் வருஷத்தில் 14 ராஜதந்திரிகள் கையெழுத்து செய்த இறகு பேனாவை நவரத்தினங்களிழைத்து யூஜின் மகாராணியாரவர்கள் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டார்கள்.

உலகத்திற் பெரிய கேம்பு:—இது ருஷிய சக்கிரவர்த்தியின் முடியில் இருக்கிறது. இந்த பெரிய இரத்தினம் ஐந்து ரவைகளின் மத்தியில் பதித்திருக்கிறது. இதினும் சிறந்த கிரீடம் உலகத்தில் வேறெந்த அரசர்களிடத்திலும் இல்லையென்று சொல்லப்படுகிறது.

தேங்கு:—இலங்கைத் தீவிலே 5 கோடி தென்னை மரங்கள் உண்டு. அவற்றிலிருந்து தேங்காய் எண்ணெய்யும், புண்ணாக்கும், கொப்பரையும், நாரும், கயிறும், ஒருவித சாராயமும், வெண்ணெய்யும், ஐரோப்பாவுக்குப் போகிற ஒருவித தேங்காய்ச் சரக்கும் உண்டாகின்றன.

மைசூரில் சீன நாணயங்கள்:—மைசூர் சமஸ்தானத்தைச்சேர்ந்த சித்திர தூர்க்கத்திலுள்ள சந்திராவள்ளி என்னும் பூமியைச் சோதனை செய்தபொழுது முற்காலத்து வழங்கிய சீன நாணயங்கள் அகப்பட்டன. இதனால் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் அதிக சம்பந்த மிருந்ததாக அறியலாம்.

அதிசயமணம்:—அமெரிக்காவில் டெலிபோனில் நடந்த ஒரு கலியாணத்தில் மணமகனும் மணமகளும் 3-மைல் தூரத்திலிருந்தார்களாம். கலியாணம் செய்து வைத்த புரோகிதர் 5 மைல் தூரத்திலிருந்து மந்திரங்களை டெலிபோனிலேயே சொல்லி மங்கிலியதாரணம் செய்து வைத்தாராம்!

கடனாளியின் வேண்டுகோள்:—வியன்னா நகரத்தில் நியாய சாஸ்திரம் (B.L.) வாசிக்கும் ஒரு வித்தியார்த்தி சாப்பாட்டு ஓட்டல்காரிக்கு 120 ரூபாய்

கடனாளியானான். பணம் கொடுக்க சாத்தியப்படாமையால் எனக்குக்கொடுக்க வேண்டிய அசல் வட்டிக்கு பதிலாக என்னைக் கலியாணம் செய்துகொள் என்று வேண்டினானும்.

மரமும் காகிதமும்:—மரத்துக்கும் காகிதத்துக்கும் என்ன சம்பந்தமென்று நாம் நினைக்கவேண்டாம். ஆஸ்திரியாவிலே மரத்தைக் காகிதமாக மாற்றுகிற ஒரு பட்டரை உண்டு, அதிலே அறுப்புண்டு விழுகிற மரங்களை 145 நிமிஷத்திலே யந்திரத்தால் பக்குவப்படுத்திக் காகிதமாக்கிப் பத்திரிகைகள் அச்சிடப்பட்டு முடிகின்றன. இனி மரங்களைப் பட்டாடைகளாகவும் மாற்ற உத்தேசிக்கிறார்களாம்.

பாம்புகடிக்கு கேரோஸின் ஆயில்:—பாம்புக் கடிக்கு மண் எண்ணெய் நல்ல மருந்தாம். சர்ப்பம் தீண்டியஉடனே கடித்த இடத்தைக் கெரோஸின் எண்ணெயில் அமிழ்த்தி வைத்தால் புகை புறப்படுவதுபோல் கடித்த இடத்திலிருந்து பச்சையாக ஆவிபோல் ஒன்று வெளிப்படும். இது எண்ணெயோடு சம்பந்தப்படாது; ஆனாலும், எண்ணெயில் கண்ணுக்கு நன்றாய் தெரியும் என்று பிரசித்திபெற்ற டாக்டர் ஒருவர் தெரிவிக்கிறார்.

ஐஜாக்ரீட் என்பவனிடத்துள் ஒரு பேனாவுக்கு 75000 ரூபாய் விலை கொடுப்பதாகச் சொல்லியும் கொடுக்க மறுத்துவிட்டான். இந்தப் பேனாவானது அந்த தேசாதிபதியாகிய வாஷிங்டன் என்பவருக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் வெகுமதியாய்க் கொடுக்கப்பட்ட ஒரு பெட்டியின் சக்கையொன்றினால் செய்யப்பட்டதாம். அப்பெட்டியானது முதல் முதல் அமெரிக்காவுக்குப்போன பில்கிரிம் பாதர்ஸினுடைய கப்பலின் ஒரு துண்டால் செய்யப்பட்டதாம். ஆகையினாலிதற்கிவ்வளவு விலையேறப் பெற்றதாம்.

சமுத்திரத்தில் நல்ல தண்ணீ ரூற்றுகள்:—பெர்ஷியா தேசத்திலே கடலோரத்தி லிருக்கும் பேரைன் என்னுமூர் அதிக உஷ்ணமுள்ளது. அதன் உஷ்ணம் 130 டிக்ரியாம். அங்கே தாகத்துக்கு நல்ல ஜலம் கிடைக்காது. ஆனால் சமுத்திரத்தில் 1-மைல் தூரம்போய் அடியிலிறங்கி அங்கே யிருக்கிற அற்புதமான ஊற்றுகளிலிருந்து நல்ல தண்ணீர்கொண்டு வருகிறார்கள். சமுத்திரத்தின் அடியிலே இந்த நல்ல ஜலம் உண்டாகிறது மெத்த அதிசயமாயிருந்தாலும், இதனால்கடவுளின் இரக்ககுணத்தை அறிந்துகொள்ளலாம்.

முக்கிய விளம்பரம்.

இவ்வருஷ சந்தாத்தொகை கொடுத்தவர்களுக்கு டிசம்பர்மீ பத்திரிகை வி. பி-யில் அனுப்பப்படும். சந்தாதாரர்கள் தயவுசெய்து வழக்கம்போல் பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு பணம் அனுப்பி உதவிபுரிவார்களென்று நம்புகிறோம்.

☞ சி. எஸ். இராமசாமி ஐயர்,
மாதர் மனோரஞ்சனி பத்திராதிபர்.

161176